பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
21 02 2026 12 40
சனிக்கிழமை நண்பகல்

# ஆகாஷவாணி செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரேசில் அதிபர் திரு *Luiz Inacio Lula Da-Silva* இடையேயான பேச்சுக்கள் இன்று புதுதில்லியில் நடைபெற்றன.

2. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கண்காட்சி புதுதில்லியில் இன்று நிறைவடைகிறது.

3. செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டின் போது காங்கிரஸ் கட்சியினர் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் கண்டிக்கத்தக்கது என்று மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

4. உலக தாய்மொழி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

5. உகாண்டா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் *Anupama Upathyaya* அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

... இனி விரிவான செய்திகள்...

பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரேசில் அதிபர் திரு *Luiz Inacio Lula Da-Silva* இடையேயான பேச்சுக்கள் இன்று புதுதில்லியில் நடைபெற்றன.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இருதலைவர்களும் விரிவாக விவாதித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சர்வதேச அமைப்புகளில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

>>><><><<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கண்காட்சி இன்று நிறைவடைவதாக மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

புதுதில்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக இந்த கண்காட்சி நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த உச்சிமாநாட்டில் 118 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றதாக அமைச்சர் கூறினார்.

>>><><><<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாடு பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளதாக மத்திய அமைச்சர் திரு குமாரசாமி கூறியுள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த உச்சிமாநாட்டில் 250 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு கிடைத்த வெற்றி இது என்றும் திரு குமாரசாமி கூறினார்.

>>><><><<<

நாட்டின் வளர்ச்சியில் காங்கிரஸ் கட்சிக்கு அக்கறையில்லை என்று மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் குற்றம்சாட்டியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், புதுதில்லியில் நடைபெற்று வரும் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தியது கண்டிக்கத்தக்கது என்றார்.

நாட்டின் நலனில் காங்கிரஸ் கட்சிக்கு அக்கறையில்லை என்பதையே இது எடுத்துரைப்பதாக அமைச்சர் குறை கூறினார்.

>>><><><><<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் போது காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது ஏற்புடையதல்ல என்று மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

கர்நாடகா மாநிலம் Kalaburagi-யில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 150 நாடுகள் பங்கேற்றுள்ள இந்த மாநாட்டில் இந்தியாவின் பெருமையை கொண்டாடாமல் காங்கிரஸ் கட்சியினர் இவ்வாறு நடந்து கொண்டது வெட்கக்கேடானது என்றார்.

நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக காங்கிரஸ் உள்ளதாகவும், திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

இதற்கிடையே, காங்கிரஸ் கட்சி போராட்டம் நடத்தியதை கண்டித்து பிஜேபி தொண்டர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

>>><><><<<

*பன்னாட்டு விசாக்கான சேவை மையம் புவனேஸ்வரில் ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதல் செயல்படும் என்று மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதன்மூலம் ஒடிசா மக்கள் பெரிதும் பயனடைவார்கள் என்று தெரிவித்துள்ளார்.*

*ஒடிசாவில் இருந்து விசா பெற விரும்புபவர்கள், தற்போது கொல்கத்தாவிற்கு சென்று வருவதை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*ஏப்ரல் மாதம் முதல் இந்த மையம் புவனேஸ்வரில் செயல்படுவது ஒடிசா மக்களுக்கு வரப்பிரசாதம் என்றும் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.*

>>><><><<<

*கோவா கடல்சார் மாநாடு இன்று தொடங்கியது.*

*கோவாவில் உள்ள கடற்படை போர்க் கல்லூரியில் நடைபெறும் இந்த மாநாட்டில் 14 நாடுகள் பங்கேற்றுள்ளன.*

*கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து மேற்கொள்வது குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.*

>>><><><<<

*பேரிடர் மேலாண்மையில் தன்னார்வலர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.*

*லக்னோவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பேரிடர் ஏற்படும் பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தன்னார்வலர்கள் தான் முதலில் உள்ளதாக கூறினார்.*

*இதன் அடிப்படையில் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இதற்காக 29 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளையோருக்கு பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்சி வழங்கப்பட்டதாகவும் திரு யோகி ஆதித்யநாத் கூறினார்.*

*>>><><><><<<*

*மேற்கு வங்கத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை ஆய்வு செய்வதற்காக ஓய்வுப் பெற்ற நீதிபதிகளை நியமிப்பது குறித்து கொல்கத்தா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு Sujoi Paul தலைமையில் இன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.*

*உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மேற்கு வங்க தலைமைத் தேர்தல் அதிகாரி திரு மனோஜ்குமார் அகர்வால், அம்மாநில தலைமைச் செயலாளர் திருமதி நந்தினி கோஸ்வாமி மற்றும் காவல்துறை அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.*

>>><><><<<

இணைய பாதுகாப்பு குறித்து கூடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இணைய பாதுகாப்பு தொடர்பான தேசிய மாநாட்டினை ஜெய்ப்பூரில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இணைய குற்றங்களை தடுப்பதற்கு அரசு நிர்வாகம், நீதித்துறை மற்றும் சமூக ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் திரு சூரியகாந்த் கேட்டுக்கொண்டார்.

>>><><><<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>><><><<<

உலக தாய்மொழி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

>>><><><<<

நாட்டின் வளர்ச்சியில் பல்கலைக் கழகங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சிக்கே முதலிடம் என்ற அடிப்படையில் மாணவர்களும், இளையோரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அரசியலமைப்பு சட்டங்களின் மாண்புகளை நாட்டு மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலமே ஜனநாயகம் வலுவடையும் என்றும் அவர் கூறினார்.

வாக்காளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தொழில்நுட்பம் கூடுதலாக பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் திரு. ஓம் பிர்லா கேட்டுக் கொண்டார்.

>>><><><<<

பீகாரில் பாதசாரிகளின் நலனுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், இதுதொடர்பாக 5 முக்கிய அறிவுறுத்தல்களை போக்குவரத்துத் துறைக்கு வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சித் திட்டங்கள் பாதசாரிகளுக்கு எவ்வித சிரமத்தையும் ஏற்படுத்தக்கூடாது என்ற அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் திரு நிதிஷ்குமார் கூறியுள்ளார்.

>>><><><<<

கேரளாவில் சுகாதாரத் துறை இதுவரை இல்லாத அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திருமதி வீணா ஜார்ஜ் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ள அவர், அரசின் சாதனையை பொறுத்துக்கொள்ள முடியாத காங்கிரஸ் கட்சியினர் தமது வீட்டை தாக்கியதாக குற்றம்சாட்டினார்.

அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்பு வசதிகள் வெகுவாக மேம்பட்டுள்ளதாகவும் திருமதி வீணா ஜார்ஜ் கூறினார்.

>>><><><<<

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி மகாராஷ்டிராவில் உள்ள Bhiwandi நீதிமன்றத்தில் இன்று ஆஜரானார்.

2014 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட அவதூறு வழக்கின் விசாரணைக்காக திரு ராகுல்காந்தி நீதிமன்றத்தில் ஆஜரானதாக எமது செய்தியாளர் கூறினார்.

>>><><><<<

உத்தரப்பிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 2 வயது குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழந்தனர்.

கான்பூர் அருகே சவாய் கிராமத்தில் சென்று கொண்டிருந்த வேன், நிலைதடுமாறி குளத்தில் விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>><><><<<

## விளையாட்டுச் செய்திகள்

உகாண்டா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Anupama Upathyay அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-16. 21-15 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் Saena Kawakami-ஐ வென்றார்.

Saneeth Dayanand, Vennala Kalagotla, Lakshy Sharma, Mansi Singh, Surya Charisma Tamiri ஆகியோரும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் இரட்டையர் பிரிவுகளில் *Shikha Gautam – Ashwini Bhat* இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் *Nithin – Srininithi Narayan* இணையும் *Ishaan Bhatnagar – Shruthi Mishra* இணையும், ஆடவர் இரட்டையர் பிரிவில் *Sai Pradheek – Krishnamurthy Rai,* இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

---------------

இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான 3வது மற்றும் இறுதி மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று அடிலெய்டில் நடைபெறுகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சமநிலையில் உள்ளன.

--------------

ஆசிய *Cross Country* தடகள சாம்பியன் போட்டி, ஜப்பானின் *Fukeoka*-வில் இன்று தொடங்கியது.

இதில் இந்தியாவின் சார்பில் *Harmanjot Singh* தலைமையிலான 12 பேர் கொண்ட அணி பங்கேற்றுள்ளது.

--------------

ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து கோப்பைக்கான 26 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

***இப்போட்டி, ஆஸ்திரேலியாவில் அடுத்த மாதம் 1ஆம் தேதி தொடங்குகிறது.***

***--------------***

***Hobart புரோ ஹாக்கி லீக் போட்டியில், இந்தியா இன்று ஸ்பெயினை எதிர்கொள்கிறது.***

***>>><<<***